வரு.73 இல. 05 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

තිනකරන් වාරමංජරි

32 பக்கங்கள் 40/-

2021 பெப்ரவரி 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

February 07 Sunday, 2021

## ஊடகக் கண்காட்சி நடத்தி ஜனாதிபதியானவன் நானல்ல



### விமர்சனங்கள் குறித்து நான் கண்டுகொள்வதேயில்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எத்தகைய விமர்சனங்களை எதிர்கொள்ள நேர்ந்தாலும் தமது முறைமைக்கு இணங்கவே தாம் செயற்படுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற கிராமத்துடனான உரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நேரடியாக பங்கேற்கும் கிராமத்துடனான உரையாடல் நிகழ்வு நேற்றைய தினம் கேகாலை மாவட்டத்தில் தெரணியகல தேர்தல் தொகுதியின் திக்வெல்ல கிராம சேவையாளர் பிரிவில் நடைபெற்றது.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி;

கஷ்டப் பிரதேசங்களிலுள்ள கிராமங்களுக்கு சாதாரணமாக

04

## .lk மீதான சைபர் தாக்குதல்; விசாரணைகள் முன்னெடுப்பு

### .lk இணையத்தள பதிவாளர் பேராசிரியர் கிஹான் டயஸ்

**லோரன்ஸ் செல்வநாயகம்**




சைபர் தாக்குதலுக்கு நேற்று அதிகாலை இலக்கான .lk சில இணையத்தளங்கள் நேற்று பிற்பகலில் மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை சில இலங்கை முகவரியிலான .lk என்ற பெயரின் கீழ் செயற்பட்ட இணையதளங்கள் சைபர் தாக்குதலுக்கு இலக்காகியிருந்த நிலையில் பிற்பகலில் அதனை இயல்பு நிலைக்குக் கொண்டுவர முடிந்துள்ளதாக பேராசிரியர் கிஹான் டயஸ் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் நேற்று அதிகாலை எமது .lk டொமென் ரெஜிஸ்ட்ரியில்

04

உள்ளே...




### ஜெனரல் சவேந்திர சில்வா வி... நிலைப்பாடு

## புலிகள் அமைப்... வயாக ஐ.நா.மனித உரி... யாளர்




**சுப்பிரமணியன் நிஷாந்தன்**



ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லெட் பிரிவினைவாத விடுதலைப் புலிகள் அமைப்பின் கைப்பாவையென அமைச்சர் உதய கம்மன்பில குற்றம் சாட்டியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் கடற்படையில் கடமையாற்றிய ரியர் அட்மிரல் சரத் வீரசேகர நியமிக்கப்பட்டுள்ளமைக்கும் குற்றம் சுமத்தியுள்ளனர். அரசியலுக்கு வந்து 10 ஆண்டுகளுக்கு பின்னரே அவர் அமைச்சர் பதவிக்கு வந்துள்ளார்.

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளுக்கு உலகம் முழுவதும் கிடைக்கும் சிவில் உரிமையை இரத்துச் செய்ய மனித உரிமை ஆணையாளர் யோசனை முன்வைக்கின்றாரா?

### அமைச்சர் சரத் வீரசேகர குறித்தும் பொய்யான அறிக்கை; அமைச்சர் உதய கம்மன்பில பகிரங்க குற்றச்சாட்டு

என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டியுள்ளது. அமைச்சர் சரத் வீரசேகர கடந்த பொதுத் தேர்தலில் 03 இலட்சத்து 28 ஆயிரம் வாக்குகளை பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது மிகப் பெரிய மக்கள் ஆணை. சவேந்திர சில்வா போர்க் குற்றங்களில் ஈடுபட்டாரென்ற குற்றச்சாட்டை முன்வைக்கும் தமிழ்ப் பிரிவினைவாதிகளால் கடந்த 12 ஆண்டுகளாக போர்க் குற்றத்திற்கான சாட்சியங்களை முன்வைக்க முடியவில்லை.

இப்படியான பின்னணியிலேயே மனித உரிமை ஆணையாளர் போர்க் குற்றவாளியென இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவை கூறுகிறார். கடந்த அரசாங்கம் அவரை இராணுவ தளபதியாக நியமிக்கும் போது அது நல்லது.

எமது காலத்தில் அவர் இராணுவத் தளபதியாக செயற்படுவது கெடுதியானது. இது மனித உரிமை ஆணையாளரின் இரட்டை நிலைப்பாட்டை காட்டுகிறது.

மனித உரிமை ஆணைக்குழுவில் கொண்டுவரப்படும் யோசனையை முற்றாக நிராகரிக்க அரசாங்கம் தீர்மானித்ததை நாங்கள் தலை வணங்கி வரவேற்கின்றோமெனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.




பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் காத்தான்குடியில் இணைந்துகொண்ட முஸ்லிம் சிறுவனொருவன் கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்களின் உடலை எரிப்பதற்கு எதிராக பதாகையை ஏந்தியவாறு சென்ற போது...

### அறிக்கை குறித்து கவனம் செலுத்தப்படும் என

## இலங்கை மீது ஐ.நா மனித உரிமை பேரவை நம்பிக்கை



### உயர்ஸ்தானிகரின் செய்தித் தொடர்பாளர் கருத்து


ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையின் உள்ளடக்கம் குறித்து இலங்கை கவனம் செலுத்துமென நம்புவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.

04

### ஐ.நா மனித உரிமை ஆணையாளரின்

## இலங்கை மீதான அறிக்கைக்கு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எதிர்ப்பு

### தலைவர் பேராசிரியர் குணதாச அமரசேகர அறிக்கை



இலங்கை தொடர்பில் மனித உரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை அடிப்படை தன்மையற்றதென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் பேராசிரியர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

04

### புலிகள் ஆயுதம் மூலமாக பெற முயற்சித்ததை



## புலம்பெயர் அமைப்புகளுக்கு பெற்றுகொடுக்க ஐ.நா முயற்சி

## விடாப்பிடியாக இருந்துவரும் கம்பனிகளுக்கு தோ.தொழிலாளர்கள் விடுத்த முதல் எச்சரிக்கை

### நாளைய பேச்சில் நல்ல தீர்வு இல்லாவிடின் முடிவு மூர்க்கமாக இருக்கும்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**





அடையாள வேலை நிறுத்த போராட்டம் அமோக வெற்றிபெற்றுள்ளது. இந்த முதல் முடக்கம் முதலாளிமார் சம்மேளனத்தை முடக்கியுள்ளது. விடாப்பிடியாக இருந்த கம்பனிகளுக்கு தொழிலாளர்களின் ஒன்றுமை எச்சரிக்கையாகும்.

நாளைய பேச்சுவார்த்தையில் சம்பள உயர்வு தொடர்பில் சாதகமான முடிவு கிடைக்கவில்லையென்றால் போராட்டம் மேலும் மூர்க்கமடையும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மற்றும் இ.தொ.கா உபதலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர்

04

## வத்தளை கோவில் தீ கட்டுப்பாட்டுக்குள்



வத்தளை ஹேகித்தை ஸ்ரீ சிவ சுப்பிரமணியர் கோவிலில் இரண்டாம் தளத்திலுள்ள திருமண மண்டபத்தில் நேற்றுக்காலை ஏற்பட்ட திடீர் தீப்பரவல் உடனடியாக

04

### ஜெனீவாவில் மனித உரிமை மீறல் குறித்து TNA பேசுவதாயின்

## புலிகளால் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையே முதலில் பேச வேண்டும்

### யாழ்.சிவில் சமூக நிலையத்தின் இணைப்பாளர் அருண் சித்தார்த்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவாவில் மனிதவுரிமை மீறல்கள் குறித்து பேசுவதென்றால் முதலில் விடுதலைப் புலிகள் அமைப்பால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த 11 வருடங்களாக தமிழ் மக்களின் துன்பங்களைக்காட்டி ஜெனிவாவுக்கு சுற்றுலாச் சென்று

## சினிமா நடிகை மியுரி நேற்று காலமானார்

இலங்கை சினிமா, மேடை நாடகம், சின்னத்திரை வரலாற்றில் முக்கிய தடம் பதித்த பிரபல நடிகை மியுரி சமரசிங்க தனது 81 ஆவது வயதில் காலமானதாக அவரது குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.



நடனக் கலைஞராக, தயாரிப்